## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

### அரசு தரப்பு சாட்சி 12 (LW16) வாக்குமூலம்

### சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ஜெயந்தி | வட்டம் | - | |
| க/பெ | - | ராஜ்குமார் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 09.07.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை**

நான் தற்போது வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 27.10.2020ம் தேதி செஞ்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது செஞ்சி டி.எஸ்.பி அவர்களின் உத்தரவின் பேரில் அனந்தபுரம் காவல் நிலையம் பொறுப்பு ஆய்வாளராக இருந்தேன். 27.10.2020ம் தேதி வாதி நிர்மலா என்பவர் அனந்தபுரம் காவல் நிலையம் சேர்ந்து எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். அதை அனந்தபுரம் உதவி ஆய்வாளர் நரசிம்மஜோதி என்பவர் பெற்று அனந்தபுரம் நிலைய குற்ற எண்.1696/2020 பிரிவு 174(1) Cr.P.C. படி வழக்கு பதிவு செய்ததை எனது பார்வைக்கு அனுப்பப்பட்டு நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். எழுத்துமூலமான புகார் ஏற்கனவே அதசாஆ.13 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அதசாஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் ரமேஷ், சேகர் ஆகியோர்

முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் ஏற்கனவே அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அதசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 அடி நீளம் உள்ள சிகப்பு நிற காப்பர் ஒயர் ஒன்று, 39 அடி நீளமும் 13 அடி இரட்டை இரும்பு கட்டுக்கம்பி ஒன்று, 2 அடி நீளமும் அதில் 3/4 அடி கவையுடன் கூடிய கம்பு சுற்றிய முள்குச்சி ஒன்றும் சுமார் 2 3/ 4 அடி நீளம் உள்ள நுனாகுச்சியும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட சான்றுபொருட்கள் சாபொ.1 முதல் 4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய தினமே சம்பவ சாட்சிகளான நிர்மலா, செல்வதுரை, கோவிந்தன், ஏழுமலை, பொன்னுசாமி, உஷா ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு சாட்சிகள் தனசேகரன் மற்றும் பஞ்சாயத்தாராக விசாரிக்கப்ட்ட தாமோதரன் அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் இந்த வழக்கில் எதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளார். அதே தேதியில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான ரமேஷ், சேகர் அவர்களின் வாக்குமூலமும் பதிவு செய்தேன். பின்னிட்டு பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக இறப்பின் காரணம் அறிய காவலர் வெங்கடேசன் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தினை அனுப்பிவைத்தேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை சாட்சிகளான நிர்மலா, செல்வதுரை, கோவிந்தன், ஏழுமலை, பொன்னுசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் தயாரித்த பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.16 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. நான் சேகரித்த சான்றுபொருட்களை படிவம் 91 மூலம் செஞ்சி குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி படிவம் 91 அதசாஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனசேகர் என்கிற புகைப்பட கலைஞர் மூலம் சம்பவ இடத்தையும் சம்பவத்தில் இறந்த நபரையும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. அந்த புகைப்படங்கள் 12 எண்ணிக்கை சா.பொ.7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.(மேற்படி புகைப்படங்களுக்கு நேகடிவ் அல்லது சி.டி. தாக்கல் செய்யப்படவில்லை என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் மேற்படி சான்றுபொருள் குறியீடு செய்யப்பட்டது). பிறகு அந்த காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.எழிலரசி என்பவர் பொறுப்பு எடுத்துக்கொண்டபடியால் அவரிடம் மேற்கொண்டு புலன்விசாரணைக்காக கோப்பினை ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நிர்மலா காவல் நிலையத்தில் எந்த புகாரும் கைரேகை வைத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நிர்மலா நீதிமன்றத்தில் சாட்சியத்தில் அவர் கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றும் அவர் கையொப்பம் செய்து கொடுத்த புகார் இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் நிர்மலா கையொப்பம் செய்து கொடுத்த புகார் அல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகாரின் அடிப்படையில் நான் புலன்விசாரணை மேற்கொண்டது சட்டப்படி தவறு என்றால் நிர்மலா காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் நான் புலன்விசாரணை செய்தேன். நான் எதிரியை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரித்து பிரிவு 161(3) குவிமுசா வின் படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சட்டத்திற்கு விரோதமாக புலன்விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக கூறும் சான்றுபொருட்கள்

மற்றும் நான் தயார் செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இறந்துபோன நபருடைய மின்சார இணைப்பில் இருந்து தான் மின்சாரம் எடுக்கப்பட்டு அவர் இறந்துள்ளார் என்றால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை, எனக்கு பின்னால் புலன் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் தான் அது பற்றி விசாரித்தார். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தின் படியும் பார்வை மகசர் படியும் சம்பவ இடத்திற்கு அருகில் எதிரிக்கு சொந்தமான நிலம் எதுவும் இல்லை என்றால பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் எதிரியின் நிலம் பற்றி குறிப்பிடவில்லை. நான் முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.